<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

<u>S.C.No. 128/2024</u>

Deposition of witness for Prosecution/Defence/Court : <u>P.W.1</u>

<u>Accused present</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திருமதி.கருப்பாயி | Caste | : | |
| Father's /Husband's Name | : | | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 03rd day of February, 2026.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது வத்றாப், மறவர் தெற்கு தெருவில் வசித்து வருகிறேன். நான் மாடுகள் வைத்து பால் வியாபாரம் செய்துவருகிறேன். வழக்கில் இறந்துபோனவர் எனது கணவர் ஆவார். அவர் பெயர் ராதா. ஆஜர் எதிரியை தெரியும். அவர் பெயர் கர்ணன். அவர் எனது கொளுந்தன் மகன் ஆவார்.

எங்களுக்கும் எதிரிக்கும் என்ன பிரச்சனை என்றால் எங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் வீடு கட்டிக்கொண்டு அந்த இடத்தை தனக்கு எழுதிக்கொடுக்குமாறு எதிரி கேட்டு தகராறு செய்துவந்தார். இதற்கு முன்பு ஒரு முறை எனது கணவரை எனது வீட்டிற்குள் புகுந்து எதிரி வெட்டவந்தார்.

தேதி ஞாபகம் இல்லை. இரண்டு வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மதியம் 3.00 மணிக்கு நான் சொர்ணமஹால் கல்யாண மண்டபத்திற்கு முன்பு அமைந்துள்ள ஆற்றினை தாண்டி உள்ள ஓலைப்பட்டி என்ற ஏகாளிக்கு பாத்தியப்பட்ட தோப்பில் மாடு மேய்த்துக்கொண்டிருந்தேன். என்னுடன் எனது கணவரும் வந்திருந்தார். அப்போது ஆஜர் எதிரி தகாத வார்த்தைகளால் பேசி

எனது கணவரை அருவாளால் வெட்ட வந்தான். நான் ஏண்டா இவ்வாறு செய்கிறாய் என்று கேட்டேன். வீடு கட்டியுள்ள இடத்தினை அவருக்கு எழுதிக்கொடுக்காவிட்டால் அப்படித்தான் வெட்டுவேன் என்று சொன்னான். நான் மேலும் அவனை தடுக்கச்சென்றபோது நீ இங்கிருந்து செல்லாவிட்டால் உன்னையும் வெட்டுவேன் என்று சொன்னதால் நான் எனது மகனையும் மருமகனையும் கூப்பிட்டு வருவதற்காக வீட்டிற்கு சென்றேன். நாங்கள் 3 பேரும் வந்தபோது எனது கணவரை ஆஜர் எதிரி வெட்டி தென்னை மட்டையை போட்டு எரித்துக்கொண்டிருந்தார்.

நாங்கள் இப்படி செய்துவிட்டாயே என்று எதிரியிடம் கேட்டோம். அவன் அங்கிருந்து கிளம்பிவிட்டான். நாங்கள் அங்கிருந்த குடத்திலிருந்த தண்ணீரை எடுத்து நானும் எனது மகன் கருப்பசாமி, எனது மருமகன் கணேசன் ஆகியோர் தண்ணீரை ஊற்றி பார்த்தபோது எனது கணவர் குப்புற படுத்த நிலையில் எரிந்த நிலையில் கிடந்தார். உடனே நான் காவல் நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேன். அந்த புகார் மனு என்னிடம் காண்பிக்கப்படுவதுதான். **அந்த புகார் மனு அசாஆ 1** ஆகும். இதற்கு முன்பு நடந்த சம்பவம் குறித்து 08.03.2024 ம் தேதி நீதித்துறை நடுவர் முன்பு ஆஜராகி ரகசிய வாக்குமூலம் கொடுத்தேன். அது என்னிடம் காண்பிக்கப்படுவதுதான். அந்த **இரகசிய வாக்குமூலம் அசாஆ 2** ஆகும். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை – இல்லை.</u>

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Principal District and Sessions Judge,
Virudhunagar District at
Srivilliputtur.